வங்கிக்கு 43 கட்டடங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு 16 கட்டடங்கள், கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கு 2 கட்டடங்கள், பிரதம கூட்டுறவு பண்டகச் சாலைக்கு 7 கட்டடங்கள், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு 4 கட்டடங்கள், கூட்டுறவு அச்சகத்திற்கு 1 கட்டடம் என ரூ.547.52 கோடி செலவில் மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த நான்கே ஆண்டுகளில் கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சங்கம் 22—4—2015 முதல் வேறோர் இடத்தில் பாதுகாப்பு வசதியுடன் செயல்பட்டு வருகிறது. இந்தச் சங்கத்திற்கு அங்கே சொந்த இடம் இல்லாத நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இடம் பார்த்துக் கொடுக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இச்சங்கத்திற்குச் சொந்தக் கட்டடத்தை உறுதியாகக் கட்டிக் கொடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 309, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

309—

பகுதிநேர நியாய விலைக் கடை

***32059—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, பிலிவலயல் ஊராட்சி, ஏத்தநாடு கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2015 செப்டம்பர் 21

திருமயம் தொகுதி, பிலியவயல் ஊராட்சியில், ஏத்தநாடு கிராமத்தில் 125 குடும்ப அட்டைகளே உள்ளன. அரசின் விதிமுறைகள் பூர்த்தி ஆகாத நிலையில், ஏத்தநாடு கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடையை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.

திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சத்தில் கிடந்த தமிழகத்தை, அயராத உழைப்பாலே அனைத்துத் துறைகளிலும் உச்சத்தில் நிறுத்திய எங்கள் அம்மாவே! (மேசையைத் தட்டும் ஒலி) கார்கால மழையாக, களிலூட்டும் அருவியாக, தேன் தமிழ் பூமிக்கு தீரா குறை தீர்க்க வந்த தெய்வமாய், உருவாகி வந்த பொன்மனமே, புகழ்தரமே எங்கள் அம்மாவே! (மேசையைத் தட்டும் ஒலி) தொண்டுக்கே பிறந்த தவமாக, துன்பத்திற்குக் கலங்கா மனமாக, தொட்டதெல்லாம் வெல்கின்ற ஜெயமாக, தென்னுதமிழ் பூமிக்கு வந்திட்ட தவமே, எங்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) பொங்கு தமிழர் மண்ணுக்கு பூலோக சொர்க்கம் தந்த பலமே! 7½ கோடி தமிழ் மக்கள் வெகுமானம் பெறுவதற்கே விடிவெள்ளியாய் வந்த எங்கள் ஒப்பில்லா ஒளி வானமே, எங்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) கருணையற்ற அரக்கர்களின் இரக்கமற்ற தாக்குதல்களை சத்தியத்தின் துணை நின்று வென்றெடுத்த வீரத் திருமகளே! (மேசையைத் தட்டும் ஒலி) திக்கெட்டும் தேடினாலும் நின் புகழை ஒப்பிட்டுச் சொல்லவே முடியாத உலகத்து அதிசயமே, எங்கள் தாயே! வீரமிகு பூமிக்கு, ஈரமிகு இதயத் தாயே! வாரி வாரித் தருகின்ற வள்ளலே! நாங்கள் நாளெல்லாம் வணங்குகின்ற எங்கள் குடும்ப குல சாமியே! அம்மாவே தங்களின் பொற்பாதங்களில் வணக்கத்தினையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் பணியே மகேசன் பணி என்று நல்லாட்சி நடத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு, திருமயம் தொகுதி, பிலியவயல் ஊராட்சி, ஏத்தநாடு

கிராமத்தில் இல்லங்குடி போன்ற குடியிருப்புகள் உள்ளன. தாய்க் கிராமமான பிலியவயல் கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவுக்கு மேல் உள்ள தொலைதூரத்தைக் கணக்கில் கொண்டு, எதிர்காலத்தில் ஏத்தநாடு கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதிக்குட்பட்ட நெடுங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்படும் பிலியவயல் முழுநேர நியாய விலைக் கடையில் 384 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இதில் ஏத்தநாடு கிராமத்தில் உள்ள 125 குடும்ப அட்டைகளும் அடங்கும். இதனைப் பிரித்துவிட்டால், தாய்க் கடையில் வெறும் 259 குடும்ப அட்டைகளே மிச்சப்படும். தாய்க் கடையின் விற்பனையாளரே வாரத்தில் 2, 3 நாட்கள் பகுதிநேரக் கடைக்கும் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, தாய்க் கடையினுடைய அத்தியாவசியப் பொருட்களின் விநியோகமும் பாதிக்கின்ற நிலை ஏற்படும். இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆய்வுகளுக்குப் பின்னால், சிறப்பு நேர்வாகக் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டது கேக்கல்நத்தம் என்கின்ற ஒரு மலைக் கிராமம். அந்தக் கிராமம் சுமார் 750 மக்கள்தொகையைக் கொண்ட*

கிராமமாகும். அந்தக் கிராமத்திற்கு சாலை வசதி இல்லாத காரணத்தினால், நோயாளிகளாக இருந்தாலும், கர்ப்பிணிப் பெண்களாக இருந்தாலும் தொட்டில் கட்டிதான் அவர்களை அங்கிருந்து கீழே இறக்கி வரவேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. அங்கிருந்து கீழேயிருக்கக்கூடிய பெரியசக்கனாலூர் என்ற கிராமத்திலே தாய்க் கடை இருக்கிறது. இது அரசினுடைய விதிமுறைகளுக்குட்பட்டு 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது; கடைகளுக்கான கார்டுகளும் இருக்கின்றன. ஆகவே, அந்தக் கிராம மக்கள் பொருட்களை வாங்க வேண்டுமென்று சொன்னால், மேலே காட்டு மலைப் பகுதியிலிருந்து கீழே 5 கிலோ மீட்டர் இறங்கி வந்து, 5 கிலோ மீட்டர் மீண்டும் ஏறுவது என்பது மிகப் பெரிய சிரமமான காரியமாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த பெரியசக்கனாலூரில் இருக்கக்கூடிய அந்தக் கடையைப் பிரித்து, அந்த மலைக் கிராமத்திற்கு ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை உருவாக்கித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மலைக் கிராமமான, கேக்கல்நத்தம் கிராமத்திற்குப் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கருத்துரு பெறப்பட்டு, விதிகள் பூர்த்தியாகின்ற நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 310, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.